IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1352/2025

Deposition of Witness PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : மெய்யழகன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

All accused absent. . குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.02.2025 ஆம் தேதி ஈரோடு நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் பகல் ரோந்து அலுவலக நானும், என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன், காவலர் ஜெயபிரகாஷ் ஆகியோருடன் பகல் 11:30 மணியளவில் ஈரோடு பன்னீர்செல்வம் பார்க், காந்திஜி ரோடு, பிரஸ் ரோடு சந்திப்பில் வந்த போது எஸ். எம். சாதிக் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநகர மாவட்ட செயலாளர் அவர்கள் தலைமையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த சிலர் சம்பவ இடத்தில் சூரம்பட்டிவலசு மாகாளி அம்மன் கோவில், பொட்டு சாமி கோவில், மதுரை வீரன் கோவில் ஆகிய கோவில்களை புதுப்பிக்கும் பொருட்டு ஊர் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து இடித்ததை கண்டித்து எவ்வித முன் அனுமதியும் முன் அறிவிப்பும்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.02 18:44:47 +0530

இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக சாலை மறியல் செய்ய முயன்றவர்களை கலைந்து செல்லுமாறு உதவி ஆய்வாளர் அவர்கள் வலியுறுத்தியும் கேளாமல் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை மறியல் செய்தவர்களை கைது செய்தும், தக்க பாதுகாப்பில் வைத்தும் உதவி ஆய்வாளர் 12:30 மணியளவில் நகர காவல் நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.45/24, சட்டப்பிரிவு.143,341 IPC பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தார். அன்றைய தினம் போராட்டத்தில் இருந்த நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இது சம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாலை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடமானது ஜன நடமாட்டம் போக்குவரத்து மிகுந்த இடம் என்றால் சரிதான். நாளை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு இடதுபுறம் மணிக்கூண்டு அருகில் வரிசையாக கடைகள் உள்ளது என்றால் சரிதான். வலது புறம் நடைமேடையில் தற்காலிக கடைகள் வரிசையாக உள்ளது என்றால் சரிதான். சாலை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடத்தை ஒட்டினார் போல் போக்குவரத்து போலீசாரின் நிழற்குடை உள்ளது என்றால் சரிதான்.

அந்த போலீசாரின் நிழற்குடை பகுதியில் காலை 8:00 மணி முதல் இரவு 8 மணி வரை கண்டிப்பாக ஒரு போக்குவரத்து போலீசார் பணியில் இருப்பார் என்றால் சரிதான். சாலை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடமானது ஈரோடு நகரப் பகுதியில் முக்கிய பகுதியாகும் என்றால்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.02 18:44:58 +0530

சரிதான். அந்த பகுதியில் 5 சாலைகள் பிரியும் பகுதி என்றால் சரிதான். அந்த ஐந்து ரோடு பிரியும் பகுதியில் ஒவ்வொரு புறமும் பார்க்கும் வகையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அன்றைய தினம் ரோந்து பணிக்கு நான் காவல் நிலையத்தில் இருந்து கிளம்பும்போது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று பேர் வந்தார்கள். நாங்கள் காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு கிளம்பும்போது 10 மணி இருக்கும். ரோந்து பணிக்கு பொதுவாக இரண்டு காவலர்கள் செல்வது வழக்கம் என்றால் சரிதான்.அன்றைய தினம் எங்களுக்கு சிறப்பு ரோந்து பணி எதுவும் கிடையாது என்றும், சாதாரண ரோந்து பணி தான் என்றால் சரிதான்.

ரோந்து பணிக்கு சென்றபோது ஆயுதங்கள் எதுவும் எடுத்துச் செல்லவில்லை. சாலை மறியல் செய்து கொண்டிருப்பதாக எங்களது காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது மணி 11.30. ரோந்து பணிக்கு இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்றோம். நாங்கள் சென்ற இரண்டு இருசக்கர வாகனங்களும் காவல்துறையைச் சார்ந்ததா அல்லது எங்களுக்கு சொந்தமானதா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு செல்லும் போது முதல் முறையாக மரப்பாலம் பகுதிக்கு சென்றோம்.

மரபாலம் பகுதியில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் ஞாபகம் இல்லை. நான்கு பேரும் சேர்ந்து அன்றைய தினம் ரோந்து பணிக்கு சென்றதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் ஞாபகம் இல்லை. எனது வாகனத்தை நான் ஓட்டிச் சென்றேன் எனது பின்னால்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.02 18:45:06 +0530

காவலர் ஜெயபிரகாஷ் அமர்ந்து வந்தார். மற்றொரு வண்டியை யார் ஓட்டி வந்தார் என்று ஞாபகம் இல்லை. மரப்பாலம் பகுதிக்கு சென்று விட்டு வேறு எந்த பகுதிக்கு சென்றோம் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சாலை மறியல் செய்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரியாக தெரியவில்லை. அந்த பகுதியில் பெண்களும் நின்று கொண்டிருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. பொதுமக்களும் இருந்தார்கள்.11 மணிக்கு சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றது பொருத்து எங்களது உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தோமா என்றால் அது உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு மிக அருகாமையில் தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட அனைத்து நபர்களின் பெயர், விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து உடனடியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து, அதன் பேரில் சிறப்பு காவல் பிரிவினர் அங்கு வந்து விட்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சம்பவம் குறித்து எங்களது காவல் நிலைய தனிப்பிரிவு காவல் பிரிவை சேர்ந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்களா என்றால் ஞாபகம் இல்லை.

வழக்கு சம்பவத்தை பொருத்து நாங்கள் புகைப்படம் எடுத்தோமா என்றால் தெரியவில்லை. சம்பவ இடத்தில் உதவி ஆய்வாளர் எவ்வளவு நேரம் அங்கு விசாரித்தார் என்றால் சுமார் முக்கால் மணி நேரம் விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறைய பேர் அங்கு வந்து நின்றார்கள். நிறைய பேர் அங்கிருந்து சென்றார்கள் என்றால்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.02 18:45:12 +0530

சரிதான். வழக்கு சம்பவ இடத்திலிருந்து அங்கு இருந்தவர்களை எந்த வாகனத்தில் அழைத்துச் சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் நான்கு பேரும் எங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று விட்டோம் என்றால் தெரியவில்லை. நான் காவல் நிலையம் சென்றவுடன் என்னை பகல் 12:30 மணிக்கு என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அங்கு இருந்தவர்களை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது மணி 12 மணி இருக்கும். அன்றைய தினம் எனக்கு எத்தனையாவது பீட் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் அன்றைய தினம் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், கோவில் பிரச்சனைக்காக அன்றைய தினம் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் பொது மக்களுக்கு இடையூறாக சாலை மறியல் செய்ததாக சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரிலும் புள்ளிவிவர கணக்கிற்காகவும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்க்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.02 18:45:18 +0530